சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை.– 2012–2013–ம் ஆண்டில் பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை தாட்கோ மூலம் செயல்படுத்துவதற்கு – செயல் திட்டம் வழிகாட்டி நெறிமுறைகள் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல(பமே1 (2)துறை

அரசு ஆணை (ப) எண். 182 நாள் 27.08.2013.

விஜய ஆவணி 11, திருவள்ளுவர் ஆண்டு 2044

படிக்கப்பட்டது:

1. அரசு ஆணை (ப) எண். 21 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 28.1.2013.

2. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம், கடிதம் எண். ஜி2/3334/2012, நாள் 10.4.2013 மற்றும் 11.6.2013

-------

ஆணை: –

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசு ஆணையில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பணிகள் செயல்படுத்த 2012–2013–ம் நிதியாண்டில் ரூ.50.00 கோடி ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிட்டுள்ளதில் "தாட்கோ நிறுவனம் மூலம்" பழங்குடியினருக்கான பொருளாதார மேம்பாட்டுத்திட்டங்களை செயல்படுத்துவதற்காக ரூ.1000.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. மேலாண்மை இயக்குனர், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் அவர்கள் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான செயல் திட்டம் மற்றும் வழிகாட்டி நெறிமுறைகள் அடங்கிய முன்மொழிவினை அரசுக்கு அனுப்பி அரசின் ஒப்புதலை வழங்குமாறும், இத்திட்டத்தைச் செயல்படுத்தும் போது தாட்கோவின் மேலாண்மை இயக்குநர் அவர்கள் பழங்குடியின நல இயக்குநரிடம் கலந்து ஆலோசித்து தேவைக்கேற்ப பயனாளிகளின் எண்ணிக்கையையும் நிதி ஒதுக்கீடுகளையும் திட்டமிட அதிகாரம் அளிக்குமாறும் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேலாண்மை இயக்குனர் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் அவர்களின் மேற்காணும் கருத்துருவினை அரசு பரிசீலனை செய்து இவ்வாணையின் இணைப்பில் காணும் 2012 – 2013–ஆம் ஆண்டிற்கான வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் செயல்திட்ட அறிக்கை ஆகியவற்றிற்கு ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.43786/2013 நாள் 14.08. 2013–ல் ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி//

கண்ணகி பாக்கியநாதன்,
அரசு செயலாளர்

பெறுநர்,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்,
திருமங்கலம், சென்னை – 101.

இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை –5.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்( க.மா.பா) துறை, சென்னை – 9
நிதித் {(ஆதி(ம)பந) , வரவு செலவு பொது–I,
வரவு செலவு பொது – II} துறை, சென்னை – 9.
மாநிலக்கணக்காயர், சென்னை –6/18/35/
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு) சென்னை –8.

நகல் :-
அமைச்சர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை
அவர்களின் தனிச் செயலர், சென்னை–9
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை–9
இருப்புக்கோப்பு/ உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ஏ.ர. தங்கம் 2.9.13
பிரிவு அலுவலர்.

## இணைப்பு –I
## பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் செயல்திட்ட அறிக்கை 2012–2013

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பயனாளிகள் எண்ணிக்கை | திட்ட மதிப்பீடு ஒரு அலகு | மானியத் தொகை ஒரு அலகு | வங்கிக் கடன் ஒரு அலகு | மொத்த மானியம் தொகை | மொத்த வங்கிக் கடன் | மொத்த திட்ட தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | நிலம் மேம்பாட்டுத் திட்டம் | 20 | 7.50 | 3.75 | 3.75 | 75.00 | 75.00 | 150.00 |
| 2. | தொழில் முனைவோர் திட்டம் | 57 | 7.50 | 3.75 | 3.75 | 213.75 | 213.75 | 427.50 |
| 3. | இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டம் | | | | | | | |
| | அ) பயணியர் வாகனம்/ ஈப்பு | 20 | 8.00 | 4.00 | 4.00 | 80.00 | 80.00 | 160.00 |
| | ஆ) கனரக வாகனம் (லாரி) | 100 | 11.00 | 5.50 | 5.50 | 550.50 | 550.50 | 1101.00 |
| 4. அ) | மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான சுழல்நிதி 20குழு (20X12) | 276 | 0.75 | 0.25 | 0.50 | 5.75 | 11.50 | 17.25 |
| ஆ) | மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான பொருளாதார கடன் 8 குழு (8 X 12) | 96 | 7.50 | 3.75 | 3.75 | 30.00 | 30.00 | 60.00 |
| 5. | தொழில் தையல் கூட்டுறவு சங்கங்களுக்கு நிதியுதவி | 339 | 0.15 | 0.04 | 0.10 | 15.255 | * 35.595 | 50.85 |
| 6. | திட்ட மதிப்பாய்வு மற்றும் நிர்வாகச் செலவினங்கள் | | | | | 29.745 | - | 29.745 |
| | மொத்தம் | **908** | | | | **1000.00** | **996.35** | **1996.35** |

* விளிம்புத் தொகை

கண்ணகி பாக்கியநாதன்,
அரசு செயலாளர்

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்

## இணைப்பு – II

## தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்

## பழங்குடியினர் மேம்பாட்டிற்கான வழிகாட்டி நெறிமுறைகள் 2012– 2013

சமூக நீதியை நிலைநாட்டவும் சமுதாயத்தில் இதர பிரிவினருக்கு இணையாக பழங்குடியினர் வாழ்க்கை தரம் மற்றும் சமூக பொருளாதார நிலையினை உயர்த்திடவும் பழங்குடியின இளைஞர்களுக்கு திறன் வளர்க்கும் பயிற்சி அளிக்கவும் திட்டம் செயல்படுத்தப்படும். 2012 – 2013ம் ஆண்டிற்கு பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டிற்கு கீழ்கண்ட திட்டங்களை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1. பழங்குடியினர் நிலம் மேம்பாட்டுத் திட்டம்
2. தொழில் முனைவோர் திட்டம்
3. பழங்குடியின இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்பு திட்டம் (வாகனம் வாங்குதல்) (Vehicle Purchase Scheme for Tribal Youth)
4. மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கான சுழல்நிதி
5. மகளிர் சுய உதவி குழுக்களுக்கான பொருளாதார கடன்
6. தொழில் தையல் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி

### 1. பழங்குடியினர் நிலம் மேம்பாட்டுத் திட்டம் (Tribal Land Development Scheme)

பழங்குடியினர் வாழ்க்கை தரம் மற்றும் சமூக பொருளாதார நிலையினை உயர்த்திடவும், அவர்களது நிலத்தினை மேம்பாடு செய்து அதன்மூலம் சுயமாக வருவாய் ஈட்டிடவும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

*நோக்கம் :–*

சொந்தமாக நிலம் வைத்துள்ள பழங்குடியினத்தைச் சேர்ந்தவர்களுக்கு அவர்களுடைய நிலத்தில் சொட்டு நீர் பாசனம் அமைத்தல் மற்றும் கிணறு தோண்டுதல் / மின் மோட்டார் அமைத்தல் போன்ற நீர் ஆதாரத்தையும், நில வளத்தையும் மேம்படுத்தும் பணிகளை மேற்கொள்வதற்காக இத்திட்டம் வங்கிக் கடன் உதவியுடன் செயல்படுத்தப்படும்.

*நிதிஒதுக்கீடு:–*

இத்திட்டத்தின் கீழ் நீர்பாசன வசதிகளை ஏற்படுத்துவதற்கு மானியம் ரூ.75.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

*திட்ட மதிப்பீடு :–*

இத்திட்டத்தில் நில மேம்பாடு செய்வதற்கு ஒவ்வொரு பயனாளிக்கும் திட்ட மதிப்பீடு அதிகபட்சமாக ரூ.7.50 இலட்சம் நிர்ணயிக்கப்படுகிறது.

*தகுதி:–*

1. விண்ணப்பதாரர் பழங்குடியினர் இனத்தை சார்ந்தவர்களாக இருக்க வேண்டும்.
2. குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.
3. வயது வரம்பு 18–க்கு மேல் 55 வரை.

4. விண்ணப்பதாரர் விவசாயம், தோட்டப்பயிர் மற்றும் மலர் சாகுபடி செய்பவராக இருக்கவேண்டும்.

5. விண்ணப்பதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர், பழங்குடியினர் மேம்பாட்டு திட்டங்களின் (தாட்கோ திட்டங்களின்) கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக்கூடாது.

*நிபந்தனைகள்:—*

இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவோர் கீழ்க்கண்ட நிபந்தனைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

1. பாசனவசதி செய்ய உள்ள நிலம் விண்ணப்பதாரின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

2. நிலம் மேம்பாடு செய்வதற்கு அந்தந்த மாவட்டங்களில் நபார்டு வழி காட்டுதலின்படி கிணறு தோண்டுதல், ஆழ் துளை கிணறு தோண்டுதல், மின் மோட்டார் அமைத்தல் மற்றும் மின் இணைப்பு பெறுதல் ஆகியவற்றிற்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்.
(பயனாளி மாவட்டத்தின் எந்த பகுதியிலும் நிலம் வைத்திருக்கலாம்).

3. ஆழ் துளை கிணறு தோண்டுவதற்கு விண்ணப்பதாரின் நிலத்தில் போதிய நீர் ஆதாரம் உள்ளது என்பதற்கான புவியியல் வல்லுநரின் (Geologist) சான்று பெறப்படவேண்டும்.

*விண்ணப்பம் பெறும் முறை:—*

தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் (http://application.tahdco.com) என்ற இணையதளத்திலோ அல்லது அந்தந்த மாவட்ட மேலாளர்கள் (TAHDCO) அவர்களிடம் நேரில் பெற்று பூர்த்தி செய்து சமர்ப்பிக்கலாம்.

*நேர்முக தேர்வின்போது சமர்ப்பிக்கவேண்டிய ஆவணங்கள்:—*

1. புகைப்படம் – 2 (Pass port size)
2. பழங்குடியினர் சாதிச் சான்று
3. ஆண்டு வருமானச் சான்று
4. குடும்ப அட்டை நகல் / வட்டாட்சியர் கையொப்பமிடப்பட்ட இருப்பிட சான்று
5. நில உடமை ஆவணங்கள் (மேம்பாடு செய்ய உள்ள நிலத்தின் புல எண்., சிட்டா, அடங்கல் மற்றும் நில ஆவணம்)
6. 10 வருடத்திற்கான வில்லங்க சான்றிதழ்
7. ஆழ் துளைக் கிணறு தோண்டுவதற்கு விண்ணப்பதாரின் நிலத்தில் போதிய நீர் ஆதாரம் உள்ளது என்பதற்கான புவியியல் வல்லுநரின் (Geologist) சான்று பெறப்படவேண்டும்.
8. மின் இணைப்புக்கான ஒப்புதல் கடிதம் அல்லது அதற்கொப்பான ஆவணம்.

*விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்யும் முறை:—*

மாவட்ட மேலாளர்களால் பெறப்பட்ட விண்ணப்பங்களிலிருந்து மாவட்ட அளவிலான கீழ்கண்ட அலுவலர்களைக் கொண்ட தேர்வுக் குழு மூலம் விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்படுவர்.

1. மாவட்ட ஆட்சித் தலைவர் – தலைவர்
2. வேளாண் இணை இயக்குநர் / இணை இயக்குநர் (தோட்டக் கலை) – உறுப்பினர்

3. செயற்பொறியாளர் (வேளாண் பொறியியல்) – உறுப்பினர்
4. மாவட்ட மேலாளர், தாட்கோ – ஒருங்கிணைப்பாளர்
5. மாவட்ட முதன்மை வங்கி மேலாளர் – உறுப்பினர்
6. மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் – உறுப்பினர்
7. துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஆதிந) – உறுப்பினர்
8. சேவைப் பகுதி வங்கியாளர் – உறுப்பினர்

தேர்வு குழுவினரால் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் கடன் கோரி வங்கிக்கு பரிந்துரை செய்யப்படும்.

*மானிய விவரம்:–*

திட்ட மதிப்பீட்டில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அதிகபட்சமாக 50% அல்லது ரூ.3.75 இலட்சம் இதில் எது குறைவானதோ அத்தொகை மானியமாக வழங்கப்படும். இவ்வாறு விடுவிக்கப்படும் மானியம் பின் விடுவிப்பு மானியமாக (Backend Subsidy) இருக்கும்.

*நிதி விடுவிக்கும் முறை:–*

வங்கி கடன் தொகை அளிப்பதற்கான ஒப்புதல் கடிதம் (Form III) பெறப்பட்டவுடன் முதுநிலை வரிசைப்படி தாட்கோ மானியம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணைப்படி வங்கிக்கு நேரடியாக விடுவிக்கப்படும். (தாட்கோ மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் வங்கி படிவம்–3 பெறப்பட்ட தேதியை முதுநிலை வரிசையை கணக்கிடுவதற்கு எடுத்துக் கொள்ளப்படும்)

வங்கி மேலாளர், திட்ட மதிப்பீட்டின்படி, குழாய் பதிக்கும் / நீர் ஆதாரத்தை ஏற்படுத்தும் மின் மோட்டார் வழங்கும் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள நிறுவனத்திற்கு அதற்கான தொகையினைக் காசோலையாக வழங்குவார்.

*சொத்து உருவாக்குதல்:–*

திட்ட மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு சொத்து உருவாக்கம் செய்யப்பட்டுள்ளதை மாவட்ட மேலாளர் உறுதி செய்ய வேண்டும்.

## 2. தொழில் முனைவோர் திட்டம்

*நோக்கம்:-*

பழங்குடியினர்கள் தங்களுக்கு தெரிந்த, விருப்பமான, முன் அனுபவம் உள்ள தொழில் புரிந்து வருவாய் ஈட்டி பயன்பெற்று வாழ்க்கையில் முன்னேறும் பொருட்டு தொழில் முனைவோர் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டம் வங்கிக் கடன் உதவியுடன் செயல்படுத்தக்கூடிய திட்டமாகும்.

ஒவ்வொரு பயனாளியும் தேர்வு செய்யப்படும்போது திட்ட அறிக்கையினை பகுப்பாய்வு செய்து சிறந்த திட்டத்திற்கு முன்னுரிமை அளித்து அதனடிப்படையில் பயனாளிகள் தேர்வு செய்யப்படுவர்.

1. தேர்வு செய்யப்படும் திட்டம், சொத்தினை உருவாக்க கூடியதாகவும் தொடர்ந்து பயனாளிகளுக்கு போதிய வருமானத்தினை வழங்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.
2. தேர்வு செய்யப்படும் திட்டம் குறைந்த பட்சமாக ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் முழுமையான திட்ட அறிக்கையுடன் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

3. வங்கியாளர்களால் திட்ட அறிக்கையில் உள்ளபடி முழுக் கடனையும் வழங்காமல மானியத் தொகையினை மட்டுமே கடனாக வழங்குதல் மற்றும் சொத்து உருவாக்கத்தின் போது வங்கியிலிருந்து நேரடியாக பயனாளிகள் பெயரில் காசோலை வழங்குதல் போன்ற நடைமுறைகளைத் தவிர்க்க வேண்டும்.

4. மேலும் வாழ்வாதாரத்தை உறுதி செய்யும் பொருட்டு இலவசமாக ஆடுகள் மற்றும் பால்மாடுகள் வழங்கும் திட்டத்தை தமிழக அரசு கால்நடை பராமரிப்புத்துறை மூலமாக செயல்படுத்தி வருவதால் ஆடுகள் மற்றும் பால்மாடுகள் கோரி சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களை இணை இயக்குநர், கால்நடை பராமரிப்பு துறை அவர்களுக்கு அந்தந்த தாட்கோ மாவட்ட மேலாளர்களால் பரிந்துரை செய்யப்படும்.

*நிதி ஒதுக்கீடு :*

தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு மானியமாக ரூ. 213.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திட்ட மதிப்பீடு

இத்திட்டத்தில் ஒவ்வொரு பயனாளிக்கும் திட்ட மதிப்பீடு அதிக பட்சமாக 7.50 இலட்சம் நிர்ணயிக்கப்படுகிறது.

*தகுதி:-*

1. விண்ணப்பதாரர் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்தவர்களின் கூட்டாண்மை நிறுவனமாகவும் இருக்கலாம்.

2. குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

3. வயது வரம்பு 18 முதல் 55 வரை.

4. கடன் மற்றும் மானியம் கோரும் தொழிலில் முன் அனுபவம் உள்ளவராக இருக்க வேண்டும்.

5. விண்ணப்பதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின் கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது.

*நிபந்தனைகள்:-*

இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுவோர் கீழ்க்கண்ட நிபந்தனைகளை கடைபிடிக்க வேண்டும்.

1. துவங்க உத்தேசித்துள்ள தொழிலை விண்ணப்பதாரரே தெரிவு செய்து கொள்ள வேண்டும்.

2. இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் சொத்து விண்ணப்பதாரரின் பெயரில் மட்டுமே பதிவு செய்யப்படவேண்டும்.

3. விண்ணப்பதாரர் தொழில் புரிவதற்காக கடன் மற்றும் மானியம் பெறப்பட்ட மாவட்டத்திலேயே தொழில் புரிய வேண்டும்.

*விண்ணப்பம் பெறும் முறை:-*

தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் (http://application.tahdco.com) என்ற இணையதளத்திலோ அல்லது அந்தந்த மாவட்ட மேலாளர்கள் (TAHDCO) அவர்களிடம் நேரில் பெற்று பூர்த்தி செய்து சமர்ப்பிக்கலாம்.

<u>நேர்முகத் தேர்வின்போது சமர்ப்பிக்கவேண்டிய ஆவணங்கள்:–</u>

1. புகைப்படம் – 2 (Pass port size)
2. பழங்குடியினர் சாதிச் சான்று
3. ஆண்டு வருமான சான்று
4. குடும்ப அட்டை நகல் / வட்டாட்சியர் கையொப்பமிடப்பட்ட இருப்பிட சான்று
5. விலைப்புள்ளி டின் எண்ணுடன் (Quotation with TIN No.)
6. ஓட்டுநர் உரிமம் மற்றும் பேட்ஜ் (வாகன கடனுக்கு மட்டும்)
7. முன் அனுபவச் சான்றிதழ்.
8. மாவட்ட மேலாளர் மற்றும் வங்கி கோரும் இதர ஆவணங்கள்

<u>விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்யும் முறை:–</u>

மாவட்ட மேலாளர்களால் பெறப்பட்ட விண்ணப்பங்களை கீழ்க்கண்ட அலுவலர்களைக் கொண்ட தேர்வுக் குழு ஒவ்வொரு வட்டாரத்திலும் கூடி விண்ணப்பதாரர்களை நேர்காணலுக்கு அழைத்து திட்டத்தைப் பற்றிய விவரங்கள் மற்றும் திட்டத்தின் மீதான விண்ணப்பதாரரின் அறிவுத் திறமை ஆகியவற்றை ஆராய்ந்து பயனாளிகளைத் தெரிவு செய்யும்.

| | | |
|---|---|---|
| 1. மாவட்ட மேலாளர், தாட்கோ | – | தலைவர் |
| 2. மாவட்ட முதன்மை வங்கி மேலாளர் | – | உறுப்பினர் |
| 3. பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம் | – | உறுப்பினர் |
| 4. துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஆதிந) | – | உறுப்பினர் |
| 5. சேவைப் பகுதி வங்கியாளர் | – | உறுப்பினர் |

தேர்வு குழுவினரால் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தாட்கோ மானியத் தொகைக்கான பரிந்துரையுடன் கடன் கோரி வங்கிக்கு அனுப்பப்படும்.

<u>மானிய விவரம்:–</u>

திட்ட மதிப்பீட்டில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அதிகபட்சமாக 50% அல்லது ரூ.3.75 இலட்சம் இதில் எது குறைவானதோ அத்தொகை மான்யமாக வழங்கப்படும். இவ்வாறு விடுவிக்கப்படும் மானியம் பின் விடுவிப்பு மானியமாக (Backend Subsidy) இருக்கும்.

<u>நிதி விடுவிக்கும் முறை:–</u>

வங்கிக் கடன் தொகை அளிப்பதற்கான ஒப்புதல் கடிதம் (Form III) பெறப்பட்டவுடன் முதுநிலை வரிசைப்படி தாட்கோ மானியம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணைப்படி வங்கிக்கு நேரடியாக விடுவிக்கப்படும். (தாட்கோ மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் வங்கி படிவம்–3 பெறப்பட்ட தேதியை முதுநிலை வரிசையை கணக்கிடுவதற்கு எடுத்துக் கொள்ளவேண்டும்)

வங்கி மேலாளர், திட்ட மதிப்பீட்டின்படி சொத்து உருவாக்குவதற்கான தொகையினை விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள நிறுவனத்திற்கு தொழில் புரியத் தேவையான பொருட்கள் / வாகனங்கள் வாங்குவதற்காக நேரடியாக விடுவிப்பார்.

சொத்து உருவாக்குதல்:—

திட்ட மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு சொத்து உருவாக்கம் செய்யப்பட்டுள்ளதை மாவட்ட மேலாளர் உறுதி செய்ய வேண்டும்.

## 3. இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம் (Self Employment Programme for Youth(SEPY)) பழங்குடியின இளைஞர்களுக்கான வாகனம் வாங்கும் திட்டம் (Vehicle Purchase Scheme for Tribal Youth)

நோக்கம் :—

தமிழ்நாடு வேலைவாய்ப்பு அலுவலகங்களில் கிட்டத்தட்ட பழங்குடியினத்தைச் சார்ந்த 600 நபர்கள் கனரக மற்றும் இலகுரக வாகன ஓட்டுநர்களாக பதிவு செய்துள்ளனர். தற்போது மலைப் பகுதிகளில் மலை வாழ் மக்கள் வசிக்கும் பகுதிகளில் பெரும்பாலும் பகுதி நேர நியாய விலை கடைகள் அல்லது நடமாடும் நியாய விலை கடைகள் மூலமாகவும் மலைவாழ் பகுதி மக்களுக்கு இன்றியமையாத பொருட்கள் விநியோகம் செய்யப்படுகின்றன. மேலும் நகர்புறத்திலிருந்து இருந்து மலை பகுதிகளுக்கு இன்றியமையா பொருட்கள் எடுத்து செல்ல வாகன ஒப்பந்தக்காரர்கள் முன்வராத நிலையில் இன்றியமையாத பொருட்கள் விநியோகிப்பதில் பெரும் சிரமங்கள் ஏற்படுகின்றன.

எனவே, மலை வாழ் கிராமங்களில் வசிக்கக் கூடிய ஓட்டுநர் பயிற்சிப் பெற்ற தகுதி வாய்ந்த இளைஞர்களுக்கு பயணியர் வாகனம்/ ஈப்பு மற்றும் சரக்கு வாகனங்கள் வாங்க கடன் வழங்கவும், இவ்வாகனங்கள் முதன்மை கூட்டுறவு சங்கத்துடன் ஒப்பந்ததாரராகப் பதிவு செய்து அவ்வாகனங்களின் மூலம் மலைவாழ் மக்கள் வசிக்கும் கிராமங்களுக்கு பொருட்கள் விநியோகம் செய்தல் மேலும் சங்கங்களின் மூலமாக விற்கப்படும் பொருட்களை நகர்ப்புறத்திலிருந்து மலைப்பகுதிக்கு எடுத்துச் செல்லப் பயன்படுத்தலாம். மலைப்பகுதிகளில் வாழும் மலைவாழ் மக்களுக்கு எளிதில் அணுக இயலாத பகுதிகளில் வசிக்கும் மக்களின் நலனுக்காக 100 நகரும் நியாய விலைக் கடைகள் அமைக்க 100 சரக்கு வாகனங்கள் மூலம் அத்தியாவசிய பொருட்களை இடையூறின்றி விநியோகம் செய்யப் பயன்படுத்தலாம். இதன் மூலம் வங்கிக்கடன் திருப்பப்படுவதுடன் மலைவாழ் கிராம மக்களுக்கு இன்றியமையாத பொருட்கள் பெறுவதில் உள்ள சிரமத்தை குறைப்பதும், வாகன ஓட்டுனர் பயிற்சி பெற்ற பழங்குடியின இளைஞர்களின் குடும்பத்தில் வாழ்வில் காணத்தக்க வகையிலான பொருளாதார முன்னேற்றத்தினை ஏற்படுத்தும். இத்திட்டம் வங்கிக் கடன் உதவியுடன் செயல்படுத்தப்படுத்தப்படும்.

தகுதி:—

1. விண்ணப்பதாரர் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்.
2. குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.
3. வயது 18—க்கு மேலும் 35 வயதிற்குள்ளாகவும் இருக்கவேண்டும்.
4. விண்ணப்பதாரர் ஓட்டுனர் உரிமம் பெற்றிருக்க வேண்டும்.
5. மானியம் கோரும் தொழிலில் (வாகன ஓட்டுதல் பயிற்சி) முன் அனுபவம் உள்ளவராக இருக்கவேண்டும்.
6. இவர் வசிக்கும் மாவட்டத்திலேயே வசிக்க வேண்டும்.

நிதிஒதுக்கீடு

இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டத்திற்கு மானியமாக ரூ.630.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

<u>திட்ட மதிப்பீடு</u>

இத்திட்டத்தின் கீழ் அதிகபட்ச திட்ட மதிப்பீடு கீழ்கண்டபடி நிர்ணயிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பயணியர் வாகனம்/ ஈப்பு | – | ரூ.8.00 இலட்சம் |
| கனரக வாகனம் | – | ரூ.11.00 இலட்சம் |

<u>நிபந்தனைகள்:–</u>

இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவோர் கீழ்கண்ட நிபந்தனைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

1. வாங்க உத்தேசித்துள்ள வாகனத்தை மேலே கண்டுள்ள வாகனங்களில் ஒன்றினை விண்ணப்பதாரரே தெரிவு செய்து கொள்ள வேண்டும்.
2. இத்திட்டத்தின் கீழ் வாங்கப்படும் வாகனம் விண்ணப்பதாரரின் பெயரில் மட்டுமே பதிவு செய்யப்பட வேண்டும்.
3. விண்ணப்பதாரர் தொழில் புரிவதற்காக கடன் மற்றும் மானியம் பெறப்பட்ட மாவட்டத்திலே தொழில் புரிய வேண்டும்.
4. சுமை ஊர்தி மற்றும் கனரக வாகனம் வாங்குவோர் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக ஒப்பந்தக்காரராக பதிவு செய்து கொள்ள விருப்பமுள்ளவராக இருக்கவேண்டும்.
5. ஈப்பு வாங்குவோர் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகம் / தொடர்புடைய சுற்றுலா அலுவரிடம் பதிவு செய்து கொள்ள விருப்பமுள்ளவராக இருக்கவேண்டும்.

<u>விண்ணப்பிக்கும் முறை:–</u>

தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் (http://application.tahdco.com) என்ற இணையதளத்திலோ அல்லது அந்தந்த மாவட்ட மேலாளர்கள் (TAHDCO) அவர்களிடம் நேரில் பெற்று பூர்த்தி செய்து சமர்ப்பிக்கலாம்.

<u>*நேர்காணலின்போது சமர்ப்பிக்கவேண்டிய ஆவணங்கள்:–*</u>

1. புகைப்படம் – 2 (Pass port size)
2. பழங்குடியினர் சாதிச் சான்று
3. ஆண்டு வருமான சான்று
4. குடும்ப அட்டை நகல் / வட்டாட்சியர் கையொப்பமிடப்பட்ட இருப்பிட சான்று
5. விலைப்புள்ளி டின் எண்ணுடன் (Quotation with TIN No.)
6. வாகன ஓட்டுநர் உரிமம் மற்றும் பேட்ஜ் (வாகன கடனுக்கு மட்டும்)
7. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் ஒப்பந்ததாரராக பதிவு செய்து கொள்வதற்கான விருப்பக் கடிதம்.
8. மாவட்ட மேலாளர் மற்றும் வங்கி கோரும் இதர ஆவணங்கள்

<u>விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்யும் முறை:–</u>

மாவட்ட மேலாளர்களால் பெறப்பட்ட விண்ணப்பங்களிலிருந்து மாவட்ட அளவிலான கீழ்கண்ட அலுவலர்களைக் கொண்ட தேர்வுக் குழு மூலம் விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்படுவர்.

1. மாவட்ட ஆட்சித் தலைவர் – தலைவர்
2. மண்டல மேலாளர், நுகர்பொருள் வாணிபக் கழகம் – உறுப்பினர்
3. முதன்மை சங்கத்தின் செயலாளர் – உறுப்பினர்
4. வட்டாரப் போக்குவரத்து அலுவலர் – உறுப்பினர்
5. மாவட்ட மேலாளர், தாட்கோ – ஒருங்கிணைப்பாளர்
6. மாவட்ட முதன்மை வங்கி மேலாளர் – உறுப்பினர்
7. மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் – உறுப்பினர்
8. துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(ஆதிந) – உறுப்பினர்
9. சேவைப் பகுதி வங்கியாளர் – உறுப்பினர்
10. தொடர்புடைய சுற்றுலா அலுவலர் – உறுப்பினர்

தேர்வுக்குழு மலைக்கிராமங்களில் நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் விநியோகிக்கப்படும் அத்தியாவசியப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கு ஏதுவாக அப்பகுதிக்கு ஏற்றாற்போல் தேவைப்படும் வாகனங்களை ( Vehicle tonnage) தெரிவு செய்து விண்ணப்பங்களை வங்கிக்குப் பரிந்துரை செய்யும்.

<u>மானிய விவரம்:–</u>

| வ. எண். | வாகனம் | திட்டமதிப்பீடு (ஒரு அலகு) | மானிய விவரம் (ஒரு அலகு) |
|---|---|---|---|
| 1. | பயணியர் வாகனம் / ஜீப்பு | ரூ. 8.00 இலட்சம் | 4.00 இலட்சம் |
| 2. | கனரக வாகனம் | ரூ. 11.00 இலட்சம் | 5.50 இலட்சம் |

திட்ட மதிப்பீட்டில் 50% சதவீதத்திற்கு மிகாமல் பின் விடுவிப்பு மானியமாக (Backend Subsidy) இருக்கும்.

<u>நிதி விடுவிக்கும் முறை:–</u>

வங்கிக் கடன் தொகை அளிப்பதற்கான ஒப்புதல் கடிதம் ( Form III) பெறப்பட்டவுடன் முதுநிலை வரிசைப்படி தாட்கோ மானியம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணைப்படி வங்கிக்கு நேரடியாக விடுவிக்கப்படும். (தாட்கோ மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் வங்கி படிவம்–3 பெறப்பட்ட தேதியை முதுநிலை வரிசையை கணக்கிடுவதற்கு எடுத்துக் கொள்ளவேண்டும்)

வங்கி மேலாளர், திட்ட மதிப்பீட்டின்படி சொத்து உருவாக்குவதற்கான தொகையினை விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள நிறுவனத்திற்கு வாகனங்கள் வாங்குவதற்காக நேரடியாக விடுவிப்பார்.

<u>சொத்து உருவாக்குதல்:–</u>

திட்டமதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு சொத்து உருவாக்கம் செய்ததையும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிக கழகம் மற்றும் முன்னோடி சங்கத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டதையும் மாவட்ட மேலாளர் உறுதி செய்ய வேண்டும்.

ஒப்பந்தம்

கனரக சரக்கு வாகனத்தைப் பொறுத்தவரை விண்ணப்பதாரர் வாகனம் வாங்கிய உடன் மலைக்கிராமங்களில் இன்றியமையாப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மண்டல மேலாளருடன் ஒப்பந்தம் செய்து கொள்ளவேண்டும்.

## 4. மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான சுழல்நிதி மற்றும் பொருளாதார கடனுதவித் திட்டம் :

நோக்கம்:

பழங்குடியின மகளிர் தங்களுக்குள் உள்ள தனித்திறமைகளை வெளிக்கொணர்ந்து ஒரு குழுவாக இணைந்து, தெரிந்த தொழில் தொடங்கி வருமானம் ஈட்டி, சமூக மற்றும் பொருளாதாரத்தில் மேம்பாடு அடையச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு குழுவிற்கும் சுழல்நிதி மற்றும் பொருளாதார கடன் மானியம் ஒருமுறை மட்டுமே வழங்கப்படும். இத்திட்டம் வங்கிக் கடனுதவியுடன் செயல்படுத்தப்படும்.

தகுதி:

பழங்குடியின மகளிர் மட்டுமே உறுப்பினர்களாக கொண்ட குழுவாக இருக்க வேண்டும். குழுவில் உள்ள ஒவ்வொரு உறுப்பினர்க்கும் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். வேறு எந்த அரசு திட்டத்திலும் சுழல்நிதி மற்றும் பொருளாதார கடனுக்கான மானியம் பெற்றிருக்கக் கூடாது.

### அ) சுழல்நிதிக்கான மானியம்:

குழு தொடங்கப்பட்டு ஆறு மாதங்களுக்குப் பிறகு தரம் பிரித்தலில் தேர்ச்சி பெற்றிருப்பின் வங்கியில் சுழல்நிதி பெறுவதற்கு தாட்கோ மானியமாக ரூ.25,000/- வங்கிக்கு விடுவிக்கப்படும். இவ்வாறு விடுவிக்கப்படும் மானியம் பின் விடுவிப்பு மானியமாக இருக்கும்.
இத்திட்டத்திற்கு ரூ.5.75 இலட்சம் மானியமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*விண்ணப்பம் பெறும் முறை:-*

தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் (http://application.tahdco.com) என்ற இணையதளத்திலோ அல்லது அந்தந்த மாவட்ட மேலாளர்கள் (TAHDCO) அவர்களிடம் நேரில் பெற்று பூர்த்தி செய்து சமர்ப்பிக்கலாம்.

*நேர்காணல் தேர்வின்போது சமர்ப்பிக்கவேண்டிய ஆவணங்கள்:-*

1. குழு உறுப்பினர்களின் சாதி சான்று
2. குழு உறுப்பினர்களின் ஆண்டு வருமானச் சான்று
3. குழு உறுப்பினர்களின் குடும்ப அட்டை நகல்
4. குழு தரம் பிரித்தல் சான்று / உறுப்பினர்களுடைய விவரங்கள் புகைப்படத்துடன் இணைக்கப்பட வேண்டும்.
5. குழுவின் தீர்மான நகல்
6. திட்ட அறிக்கை
7. வங்கி கணக்கு புத்தக நகல்
8. மாவட்ட மேலாளர் மற்றும் வங்கி கோரும் இதர ஆவணங்கள்

ஆ) பொருளாதார கடனுதவித் திட்டம் :

நோக்கம்:–

பழங்குடியின மகளிர் சுயஉதவிக் குழுக்கள் வருமானம் ஈட்டக்கூடிய தொழில்களான கைவினைப் பொருட்கள் தயாரித்தல், தோட்டப் பயிர் மற்றும் மலர் சாகுபடி செய்தல், சுற்றுலா மையங்களில் உணவகங்கள் மற்றும் பிற பொழுது போக்கு அம்சங்களை அமைத்தல் மற்றும் இதர சுற்றுலா பயணிகள் சேவை சார்ந்த தொழில்களுக்கும் விரிவுபடுத்தப்படலாம்.

தகுதி:

1. பழங்குடியின மகளிர் மட்டுமே உறுப்பினர்களாக கொண்ட குழுவாக இருக்க வேண்டும்.
2. குழு உறுப்பினர்கள் 18 வயது நிரம்பியவர்களாக இருக்க வேண்டும்
3. குழு இரண்டு முறை தரம்பிரித்தல் செய்திருக்கப்பட வேண்டும்.
4. குழுவில் உள்ள ஒவ்வொரு உறுப்பினருக்கும் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.
5. ஊக்குநர்களுக்கு ஆண்டு வருமானம் ரூ.2.00 இலட்சம் வரை இருக்கலாம். வேறு எந்த அரசு திட்டத்திலும் பொருளாதார கடனுக்கான மானியம் பெற்றிருக்கக் கூடாது.

பொருளாதார கடனுக்கான மானியம்:

திட்ட மதிப்பீட்டில் ஒவ்வொரு குழுவிற்கும் அதிகபட்சமாக 50 சதவீதம் அல்லது ரூ.3.75 இலட்சம் இதில் எது குறைவானதே அத்தொகை மானியமாக விடுவிக்கப்படும். இவ்வாறு விடுவிக்கப்படும் மானியம் பின் விடுவிப்பு மானியமாக இருக்கும்.

***விண்ணப்பம் பெறும் முறை:–***

தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் (http://application.tahdco.com) என்ற இணையதளத்திலோ அல்லது அந்தந்த மாவட்ட மேலாளர்கள் (TAHDCO) அவர்களிடம் நேரில் பெற்று பூர்த்தி செய்த சமர்ப்பிக்கலாம்.

***நேர்காணல் தேர்வின்போது சமர்ப்பிக்கவேண்டிய ஆவணங்கள்:–***

1. குழு உறுப்பினர்களின் பழங்குடியினர் சாதிச் சான்று
2. குழு உறுப்பினர்களின் ஆண்டு வருமானச் சான்று
3. குழு உறுப்பினர்களின் குடும்ப அட்டை நகல்
4. இரண்டு முறை குழு தரம் பிரித்தலுக்கான சான்று / உறுப்பினர்களுடைய விவரங்கள் புகைப்படத்துடன் இணைக்கப்பட வேண்டும்.
5. குழுவின் தீர்மான நகல்
6. திட்ட அறிக்கை
7. வங்கிக் கணக்கு புத்தக நகல்
8. மாவட்ட மேலாளர் மற்றும் வங்கி கோரும் இதர ஆவணங்கள்

<u>நிதி ஒதுக்கீடு</u>-

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான பொருளாதார மேம்பாட்டு கடன் திட்டத்திற்கு மானியமாக ரூ.30.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

<u>திட்ட மதிப்பீடு</u>

இத்திட்டத்தின் கீழ் ஒரு குழுவிற்கு திட்ட மதிப்பீடு அதிக பட்சமாக ரூ.7.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*<u>5. தொழில் தையல் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி :-</u>*

சமூக நலத்துறை கட்டுப்பாட்டில் இயங்கி வரும் மகளிர் தையல் கூட்டுறவுச் சங்கங்களில் பதிவு செய்துள்ள 339 பழங்குடியினர்களுக்கு மகளிர் தொழில் கூட்டுறவுச் சங்கத்திலுள்ள பழைய தையல் இயந்திரங்களுக்கு பதிலாக புதிய நவீன தையல் இயந்திரங்கள் வழங்கப்படும். இதனால் அரசு மூலம் மாணவ மாணவியர்களுக்கு வழங்கப்படும் 4 சதவீத வட்டியில் விளிம்புக் கடனாக வழங்கப்படும். இதற்கான செலவுத் தொகையான ரூ.35.595 இலட்சம் தாட்கோ பங்கு மூலதனத்திலிருந்தும், மீதமுள்ள 30% மானியத் தொகை பழங்குடியினருக்கான நிதி ஒதுக்கீட்டிலிருந்து வழங்கப்படும்.

மேற்கண்ட திட்டங்களை செயல்படுத்தும்போது தேவைக்கேற்ப ஒதுக்கீடுகளையும், பயனாளிகளின் எண்ணிக்கையையும் மாற்றி அமைத்துக் கொள்ள, தாட்கோவின் மேலாண்மை இயக்குநர், பழங்குடியினர் நல இயக்குநருடன் கலந்தாலோசித்து பயனாளிகளின் பட்டியலை இறுதி செய்ய அதிகாரம் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

கண்ணகி பாக்கியநாதன்,
அரசு செயலாளர்

/உண்மை நகல்/

ரா. தங்கம்
2.9.13
பிரிவு அலுவலர்